# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு

**2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்புக்கு வரவேற்கிறோம்**

**உங்கள் மொழியைக் கீழே தேர்ந்தெடுக்கவும்:**

- ○ English
- ○ عَرَبِيّ [Arabic]
- ○ Tiếng Việt [Vietnamese]
- ○ 简体中文 [Mandarin]
- ○ Laiholh [Hakha Chin]
- ○ हिन्दी [Hindi]
- ○ ελληνικά [Greek]
- ○ 日本語 [Japanese]
- ○ af Soomaali [Somali]
- ○ Türkçe [Turkish]
- ○ ਪੰਜਾਬੀ [Punjabi]

# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு

## 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்புக்கு வரவேற்கிறோம்

உங்கள் குழந்தையின் பள்ளியின் பெயரை கீழே உள்ளிடத் தொடங்கவும், கீழே தோன்றும் பட்டியலில் இருந்து பொருத்தமான பள்ளியைத் தேர்ந்தெடுக்கவும்.

**பள்ளியின் பெயர்:** [பள்ளியின் பெயரை மட்டும் காண்பிக்கவும், வளாகத்தின் பெயரை அல்ல]

தயவுசெய்து உங்கள் குழந்தையின் பள்ளியின் பெயரை உள்ளிடத் தொடங்கவும்

[பள்ளி பல வளாகங்களைக் கொண்டிருக்கவில்லை எனில், தானாகவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒற்றை வளாகத்தின் பெயரைக் கீழே காட்டவும்]

[பள்ளி பல வளாகங்களைக் கொண்டிருந்தால், பெற்றோர் / பராமரிப்பாளர் / காப்பாளர் கீழே உள்ள தானியங்கு பட்டியலிலிருந்து வளாகத்தின் பெயரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்]

**வளாகத்தின் பெயர்:**

- ○ [Name of Campus #1]
- ○ [Name of Campus #2]
- ○ [etc.]

**உங்கள் குழந்தையின் பள்ளியின் பெயர்:**

[School and Campus name]

தயவுசெய்து உங்கள் குழந்தையின் பள்ளி உங்களுக்கு வழங்கிய பள்ளி PINஐ (தனிப்பட்ட அடையாள எண்) கீழே உள்ளிடவும்.

**பள்ளி PIN (6 அல்லது 8 இலக்கங்கள்):**

தயவுசெய்து பள்ளி PINஐ உள்ளிடவும்

# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு

[Error if PIN doesn’t match school name: நீங்கள் உள்ளிட்ட கருத்துக்கணிப்பு PIN சரியாக இல்லை. சரியான கருத்துக்கணிப்பு PIN-ஐப் பெற உங்கள் குழந்தையின் பள்ளியைத் தொடர்பு கொள்ளவும்.

[Error if survey times out after 60 minutes: ஒரு மணி நேரமாகப் பயன்படுத்தப்படாததால் கருத்துக்கணிப்பு காலாவதியாகிவிட்டது. தொடர்வதற்கு, தயவுசெய்து கருத்துக்கணிப்பில் மீண்டும் உள்நுழையவும்]

**2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்புக்கு வரவேற்கிறோம்**

நீங்கள் **[பள்ளி மற்றும் வளாகத்தின் பெயர்]** இல் பயிலும் ஒரு குழந்தையின் பெற்றோர்/பராமரிப்பவர் என்பதையும், கருத்துக்கணிப்பை பூர்த்தி செய்யப் பள்ளியால் நீங்கள் கோரப்பட்டுள்ளீர்கள் என்பதையும் தயவுசெய்து உறுதிப்படுத்த முடியுமா:

- ○ ஆம்
- ○ இல்லை

[if parent selects ‘No’: உங்கள் பள்ளி விவரங்களைச் சரிபார்க்கவும் - உங்களுக்குக் கருத்துக்கணிப்பு PIN எண்ணை அனுப்பிய பள்ளியை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.]

வணக்கம் மாணவர்களின் பெற்றோரே/ பராமரிப்பாளரே [பள்ளி மற்றும் வளாகத்தின் பெயர்]

# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு

பக்கம் 1/7

## 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்புக்கு வரவேற்கிறோம்

பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களின் கருத்துக்கள், நமது பள்ளிச் சமூகம் மாணவர்களின் தேவைகளை எவ்வளவு சிறப்பாக முழுமைசெய்கிறது என்பதற்கான முக்கியமான சுட்டிக்காட்டியாகும். இந்தக் கருத்துக்கணிப்பு உங்கள் பிள்ளையின் கற்றல் மற்றும் அவர்களின் பள்ளி குறித்து உங்களிடம் கேள்விகளைக் கேட்கும். இந்த முக்கியமான கருத்துக்கணிப்பில் நீங்கள் அளித்த உள்ளீடுகளை நாங்கள் பாராட்டுகிறோம்.

ஆய்வு நோக்கங்களுக்காகவும் மாணவர்களின் விளைவுகளை மேம்படுத்தவும் கல்வித் துறை கருத்துக்கணிப்பின் செல்க முடிவுகளைப் பயன்படுத்தும். பள்ளி மேம்பாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிக்க, பள்ளிகள் இந்தக் கருத்துக்கணிப்பு முடிவுகளைப் பயன்படுத்தும்.


பங்கேற்பது விருப்பத்திற்குட்பட்டது, மேலும் இந்தக் கருத்தாய்வைப் பூர்த்தி செய்ய சுமார் 15-20 நிமிடங்கள் ஆகும்.

இந்தக் கருத்துக்கணிப்புக்கான உங்கள் பதில்கள் பெயர் அடையாளம் குறிக்காதவை, மேலும் ஆய்வு முடிவுகளிலிருந்து எந்தவொரு தனிநபரின் அடையாளத்தையும் கண்டறிய முடியாது. கல்வித் துறை சார்பாக ORIMA Research இந்தக் கருத்துக்கணிப்பை நடத்துகிறது. ORIMA Research தனியுரிமைச் சட்டம் 1988 இல் உள்ள ஆஸ்திரேலிய தனியுரிமைக் கோட்பாடுகளின் கீழ் உங்கள் உரிமைகளை மதித்துநிலைநிறுத்துகிறது. ORIMA Research தனியுரிமை (சந்தை மற்றும் சமூக ஆய்வு) சட்டம் 2021 மற்றும் தொடர்புடைய மாநில மற்றும் ஆள்புல சட்டத்திற்கும் இணங்குகிறது. ORIMA இன் முழு தனியுரிமைக் கொள்கையைப் படிக்க, இங்கே சொடுக்கவும் (ஆங்கிலப் பதிப்பு மட்டும்).


### அறிவுறுத்தல்கள்

- நீங்கள் பதிலளிக்கும் முன் ஒவ்வொரு கேள்வியையும் கவனமாக படிக்கவும்.
- நீங்கள் கொடுக்க விரும்பும் பதிலை குறிப்பிடும் விருப்பத்தேர்வை அளவில் தேர்ந்தெடுக்கவும் இது வெவ்வேறு சாதனங்களில் வெவ்வேறு விதமாகத் தோன்றும்.
    - **கணினி அல்லது மடிக்கணினியில் கருத்துக்கணிப்பைப் பூர்த்திசெய்தால்:** எடுத்துக்காட்டாக, குப்பை கொட்டுவது தடைசெய்யப்பட

வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டால், கீழே காட்டப்பட்டுள்ளபடி 'ஏற்கிறேன்' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.




- **கைபேசியில் கருத்துக்கணிப்பைப் பூர்த்திசெய்தால்**: எடுத்துக்காட்டாக, குப்பை கொட்டுவது தடைசெய்யப்பட வேண்டும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டால், கீழே காட்டப்பட்டுள்ளபடி கீழ்தோன்றும் பட்டியலில் 'தயவுசெய்து தேர்ந்தெடுக்கவும்' என்பதைக் சொடுக்கி 'ஏற்கிறேன்' என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.




- தயவுசெய்து கவனிக்கவும், சராசரி அல்லது கலவையான கருத்தைப்பதிவுசெய்வதற்கான உங்கள் நோக்கத்தை இந்த விருப்பம் உண்மையிலேயே பிரதிபலிக்குமெனில் மட்டுமே 'உடன்படவோ உடன்படாமலோ இல்லை' என்ற விருப்பத்தேர்வைத் தேர்ந்தெடுக்க வேண்டும் இதுவே அனைத்துக்குமான பதிலாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது.

## உதவி

உள்நுழைவு தொடர்பான சிக்கல்கள் அல்லது தொழில்நுட்ப வினவல்களுக்கு, ORIMA Research ஐ 1800 654 585 (வணிக நேரங்களில் கட்டணமில்லா அழைப்பு மூலம்) அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்: pos@orima.com (விசாரணைகள் ஆங்கிலத்தில் மட்டும்).

THE EDUCATION STATE · VICTORIA State Government · Department of Education · ORIMA

**வணக்கம் மாணவர்களின் பெற்றோரே/ பராமரிப்பாளரே [பள்ளி மற்றும் வளாகத்தின் பெயர்]**

# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு



*உங்கள் குழந்தையின் பள்ளியில் உள்ள மற்ற பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் சேர்ந்து எங்களுக்கு பெறுமதிமிக்க கருத்துக்களை வழங்கியதற்கு நன்றி. உங்கள் கருத்து எங்கள் பள்ளியை மேம்படுத்த உதவும்.*

தயவுசெய்து உங்கள் பிள்ளையின் வகுப்பு நிலையைத் தேர்ந்தெடுக்கவும்:
*இந்தப்பள்ளியில் உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருந்தால், மிகச் அண்மையில் பிறந்தநாள் கொண்ட உங்கள் பிள்ளையின் வகுப்பு நிலையைத் தேர்ந்தெடுத்து, மீதமுள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது அந்தப் பிள்ளையை நினைவில் கொள்ளவும். ஒரே பிறந்தநாள் கொண்ட பிள்ளைகளின் விடயத்தில், கருத்துக்கணிப்பின் மீதமுள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்க, அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவும்.*

1 அடிப்படை
2 ஆண்டு 1
3 ஆண்டு 2
4 ஆண்டு 3
5 ஆண்டு 4
6 ஆண்டு 5
7 ஆண்டு 6
8 ஆண்டு 7
9 ஆண்டு 8
10 ஆண்டு 9
11 ஆண்டு 10
12 ஆண்டு 11
13 ஆண்டு 12
14 தரப்படுத்தப்படாதது

[வகுப்பு நிலை = 10 ஆம் ஆண்டு, 11 ஆம் ஆண்டு, அல்லது 12 ஆம் ஆண்டு எனில்] உங்கள் பிள்ளை தற்போது எந்தத் தகுதிக்காகப் படித்துக் கொண்டிருக்கிறார்?

*தயவுசெய்து கவனிக்கவும்: இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் நோக்கத்திற்காக, உங்கள் பிள்ளை VCE Vocational Major கற்பதை நோக்கமாகக்கொண்டு பயின்றால், கீழே உள்ள இரண்டாவது விருப்பத்தைத் தேர்வு செய்யவும். மேலும் தகவலுக்கு இங்கே சொடுக்கவும்.*

1 விக்டோரியக் கல்விச் சான்றிதழ் (VCE)

2 விக்டோரியக் கல்விச் சான்றிதழ் (VCE) தொழிற்கல்வி சிறப்பு

3 விக்டோரிய வழித்தடங்கள் சான்றிதழ் (VPC)

4 சர்வதேச இளங்கலைப் பட்டம் (IB)

5 உறுதியாகத் தெரியவில்லை

விநியோகிக்க வேண்டாம்

# உங்கள் குழந்தையின் கற்றல் பற்றி

பின் செல்கவரும் கூற்றுகள் உங்கள் குழந்தையின் கல்வியின் அம்சங்களை விவரிக்கின்றன.

ஒவ்வொரு கூற்றுக்கும், உங்களுக்குச் சரியானது எனத் தோன்றும் பெட்டியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நீங்கள் எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்கிறீர்கள் அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் குறிப்பிடவும்.

*2026-இல் உங்கள் அனுபவங்களின் அடிப்படையில் உங்கள் பதில்களை வழங்கவும். உங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், பின் செல்கவரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது, உங்கள் குழந்தையின் மிக அண்மைய பிறந்தநாளை நினைவில்கொள்ளுங்கள்.*

| | | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|---|
| 1 | என் குழந்தை அவர்கள் பள்ளியில் கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறார் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 2 | இந்தப் பள்ளி எனது குழந்தையை மரியாதையுடன் நடத்துகிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 3 | எனது குழந்தை அவர்களின் புதிய ஆண்டு நிலைக்கு ஏற்ப இந்த ஆண்டு ஆதரிக்கப்பட்டது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 4 | என் குழந்தை பள்ளியில் பாதுகாப்பாக உணர்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 5 | கொடுமைப்படுத்தல் நடத்தைகளை எதிர்கொள்ள பள்ளியில் | 1 | 2 | 3 | 4 | 5 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கற்றுக்கொண்ட திறன்களையும் உத்திகளையும் குறித்து என் குழந்தை நம்பிக்கைகொள்கிறது | | | | | |
| 6 | என் குழந்தை பள்ளியில் மற்ற மாணவர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டதாக உணர்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 7 | இந்தப் பள்ளி எனது குழந்தைக்குப் பொறுப்புணர்வை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 8 | இந்தப் பள்ளியின் கல்வித் தரம் எனது குழந்தைக்குப் போதுமான சவாலை அளிக்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 9 | கற்றுக்கொள்வது கடினமாக இருக்கும் போது, என் குழந்தை கல்வியைத் தொடர இந்தப் பள்ளி ஊக்குவிக்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |

| | | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|---|
| 10 | எனது குழந்தை அவர்களின் வகுப்பு | 1 | 2 | 3 | 4 | 5 |

| | | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|---|
| | வேலையுடன் தொடர்புடையதாக இருக்கும்போது அவர்களின் சொந்த ஆர்வங்களை ஆராயலாம் | | | | | |
| 11 | என் குழந்தை அண்மையில் பள்ளியில் கொடுமைப்படுத்தலுக்கு உள்ளானது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 12 | இந்தப் பள்ளி எனது குழந்தைக்கு முடிவுகளை எடுப்பதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வாய்ப்புகளை வழங்குகிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 13 | இந்தப் பள்ளி எனது குழந்தையின் ஆர்வங்கள் மற்றும் திறன்களுக்காக பல்வேறு திட்டங்களை வழங்குகிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 14 | பள்ளி எனது குழந்தைக்கு அவர்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கான | 1 | 2 | 3 | 4 | 5 |

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| வாய்ப்புகளை வழங்குகிறது | | | | | |
| 15 இந்தப் பள்ளி எனது குழந்தைக்கு பள்ளி நடவடிக்கைகளில் பங்கேற்க வாய்ப்பு அளிக்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 16 வீட்டுப்பாடம் மற்றும்/அல்லது பள்ளிப் பணிச்சுமையை நிர்வகிப்பதற்கு உதவுவதற்காக எனது குழந்தைக்கு நிறுவனம்சார் திறன்கள் கற்பிக்கப்படுகின்றன | 1 | 2 | 3 | 4 | 5 |
| 17 இந்தப் பள்ளி எனது குழந்தையின் கல்வியில் பங்கேற்க எனக்கு வாய்ப்பு அளிக்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 18 இந்தப் பள்ளி எனது குழந்தைக்கு நல்ல தரமான கல்வியை வழங்குகிறது என்று நம்பிக்கைகொள்கிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| [சிறப்புப் பள்ளிகளுக்கு மட்டும்] என் | 1 | 2 | 3 | 4 | 5 |

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| குழந்தையின் ‘மாணவர் ஆதரவுக் குழு’ செயல்படும் விதத்தில் நான் திருப்தி அடைகிறேன் | | | | | |
| [சிறப்புப் பள்ளிகளுக்கு மட்டும்] என் குழந்தை பெறும் சிறப்பு ஆதரவு சேவைகள் உயர் தரம் வாய்ந்தவை | 1 | 2 | 3 | 4 | 5 |

விக்டோரியா கல்வித் துறை

வணக்கம் மாணவர்களின் பெற்றோரே/ பராமரிப்பாளரே [பள்ளி மற்றும் வளாகத்தின் பெயர்]

# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு



## இப்பள்ளியில் உள்ள ஆசிரியர்களைப் பற்றி

பின் செல்கவரும் கூற்றுகள் உங்கள் குழந்தையின் ஆசிரியர்களின் அம்சங்களை விவரிக்கின்றன.

ஒவ்வொரு கூற்றுக்கும், உங்களுக்குச் சரியானது எனத் தோன்றும் பெட்டியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நீங்கள் எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்கிறீர்கள் அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் குறிப்பிடவும்.

*2026-இல் உங்கள் அனுபவங்களின் அடிப்படையில் உங்கள் பதில்களை வழங்கவும். உங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், பின் செல்கவரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது, உங்கள் குழந்தையின் மிக அண்மைய பிறந்தநாளை நினைவில்கொள்ளுங்கள்.*

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| 19 கற்பித்தல் குறித்து ஆசிரியர்கள் உற்சாகமாகவும் நேர்மறையாகவும் உள்ளார்கள் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 20 இந்தப் பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள்/பராமரிப்பாளர்கள் இடையே பயனுள்ள இருவழித் தொடர்பாடல் உள்ளது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 21 தேவைப்படும்போது கற்றுக்கொள்வதற்கு என் குழந்தை ஆசிரியர்களிடமிருந் | 1 | 2 | 3 | 4 | 5 |

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| து கூடுதல் உதவியைப் பெறுகிறது | | | | | |
| 22 இந்தப் பள்ளியின் ஆசிரியர்கள் என் குழந்தை தங்களால் முடிந்தளவு சிறப்பாகச் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 23 என் குழந்தையின் முன்னேற்றம் (அதாவது கற்றல், நல்வாழ்வு மற்றும் ஈடுபாடு/வருகை உள்ளிட்ட துறைகளில் முன்னேற்றம்) பற்றி ஆசிரியர்கள் என்னுடன் அடிக்கடி தொடர்பு கொள்கிறார்கள். | 1 | 2 | 3 | 4 | 5 |
| 24 ஆசிரியர்கள் பயனுள்ள பின் செல்கனூட்டக் கருத்துக்களை வழங்குகிறார்கள், மேலும் எனது குழந்தையின் கற்றல் தேவைகளுக்கு எதிர்வினையாற்றுகிறார்கள் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 25 என் குழந்தையின் அறிக்கை புரிந்துகொள்ள எளிதாக உள்ளது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 26 என் குழந்தையின் அறிக்கை, அவர்களின் சாதனை மற்றும் | 1 | 2 | 3 | 4 | 5 |

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| முன்னேற்றத்தைத் தெளிவாகக் காட்டுகிறது | | | | | |
| 27 என் குழந்தை எப்படி மதிப்பிடப்படுகிறது என்பதை நான் புரிந்துகொள்கிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 28 கற்றலானது ஈடுபடுபாட்டுடன் இருக்கச்செய்வதில் ஆசிரியர்கள் மிகவும் சிறந்தவர்கள் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 29 என் குழந்தை கற்பதற்கு அவர்களின் ஆசிரியரால் உந்துதல் பெறுகிறார். | 1 | 2 | 3 | 4 | 5 |
| 30 இந்தப் பள்ளியின் ஆசிரியர்கள் நேர்மறை நடத்தையின் முன்மாதிரிகளாகத் திகழ்கிறார்கள் | 1 | 2 | 3 | 4 | 5 |

மொழியாக்கம் - வேலை

வணக்கம் மாணவர்களின் பெற்றோரே/ பராமரிப்பாளரே [பள்ளி மற்றும் வளாகத்தின் பெயர்]

# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு



*நீங்கள் கருத்துக்கணிப்பின் கிட்டத்தட்ட பாதியை முடித்துவிட்டீர்கள். எங்கள் பள்ளியை அனைத்து மாணவர்களுக்கும் மேம்படுத்த உங்கள் கருத்து பெறுமதிமிக்கதாக உள்ளது.*

## எங்கள் பள்ளி குறித்து

பின் செல்கவரும் கூற்றுகள் பள்ளிச் சூழலின் அம்சங்களையும் பள்ளிச் சமூகத்துடனான உறவையும் விவரிக்கின்றன.

ஒவ்வொரு கூற்றுக்கும், உங்களுக்குச் சரியானது எனத் தோன்றும் பெட்டியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நீங்கள் எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்கிறீர்கள் அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் குறிப்பிடவும்.

*2026-இல் உங்கள் அனுபவங்களின் அடிப்படையில் உங்கள் பதில்களை வழங்கவும். உங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், பின் செல்கவரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது, உங்கள் குழந்தையின் மிக அண்மைய பிறந்தநாளை நினைவில்கொள்ளுங்கள்.*

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| 31 இப்பள்ளியானது தூய்மையான மற்றும் நன்கு பராமரிக்கப்பட்ட வசதிகள் மற்றும் திடல்களைக் கொண்டுள்ளது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 32 பள்ளியின் வழக்கமான தொடர்பாடல் வழிகள் மூலம் எனக்குத் தேவையான தகவல்களைப் பெற முடிகிறது | 1 | 2 | 3 | 4 | 5 |

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| 33 இந்தப் பள்ளி பெற்றோர்/பராமரிப்பாளர்களின் பங்களிப்புகளை மதிப்பதாக உணர்கிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 34 எனக்கு ஏதேனும் கவலைகள் இருப்பின் செல்க இந்தப் பள்ளியை அணுகுவதில் சங்கடங்கள் இல்லையென உணர்கிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 35 இந்த பள்ளி உள்ளூர் சமூகத்துடன் வலுவான உறவைக் கொண்டுள்ளது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 36 அனைத்து கலாச்சார நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளை மதிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை இந்த பள்ளி தெரிவிக்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |

| | | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|---|
| 37 | இந்தப் பள்ளி பெற்றோர்/பராமரிப்பாளர்களின் கவலைகளை முக்கியமானவையென எடுத்துக்கொள்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 38 | பள்ளி எனது குடும்பத்தின் நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்களை பெறுமதிவாய்ந்தவையென மதிக்கிறது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 39 | இந்த பள்ளி எப்போதும் அது வழங்கும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 40 | நேர்மறையான மாணவர் நடத்தையை ஊக்குவிப்பதில் இந்தப் பள்ளி ஒரு நிலையான அணுகுமுறையைக் கொண்டுள்ளது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 41 | இந்த பள்ளி அதன் பலம் மற்றும் எவற்றை முன்னேற்ற இயலும் என்பன பற்றிய தெளிவான புரிதலைக் கொண்டுள்ளது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 42 | இந்த பள்ளி அனைத்து | 1 | 2 | 3 | 4 | 5 |

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| துறைகளிலும் மாணவர்களின் சாதனைகளை கொண்டாடுகிறது | | | | | |

விநியோகிக்க வேண்டாம்

THE EDUCATION STATE | VICTORIA State Government | Department of Education | ORIMA

**வணக்கம் மாணவர்களின் பெற்றோரே/ பராமரிப்பாளரே [பள்ளி மற்றும் வளாகத்தின் பெயர்]**

# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு



## பாதுகாப்பும் நல்வாழ்வும்

பின் செல்கவரும் கூற்றுகள் பள்ளி பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வின் அம்சங்களை விவரிக்கின்றன.

ஒவ்வொரு கூற்றுக்கும், உங்களுக்குச் சரியானது எனத் தோன்றும் பெட்டியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நீங்கள் எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்கிறீர்கள் அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் குறிப்பிடவும்.

*2026-ஆம் ஆண்டில் உங்கள் அனுபவங்களின் அடிப்படையில் உங்கள் பதில்களை வழங்கவும், மேலும் நீங்கள் அடிக்கடி எப்படி உணர்கிறீர்கள் என்பதைக் கருத்தில்கொள்ளுங்கள். உங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், பின் செல்கவரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது, உங்கள் குழந்தையின் மிக அண்மைய பிறந்தநாளை நினைவில்கொள்ளுங்கள்.*

| | உறுதியாக உடன்பட வில்லை | உடன்பட வில்லை | உடன்பட வோ உடன்படா மலோ இல்லை | உடன்படு கிறேன் | உறுதியாக உடன்படு கிறேன் |
|---|---|---|---|---|---|
| 43 இந்தப் பள்ளி எனது குழந்தையின் பாதுகாப்பில் அக்கறை கொண்டுள்ளது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 44 இந்தப் பள்ளி எனது குழந்தையின் நலனில் அக்கறை கொண்டுள்ளது | 1 | 2 | 3 | 4 | 5 |
| 45 எனது குழந்தையின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு பற்றி பள்ளியில் எவரிடமும் பேச முடியும் என்பதை நான் | 1 | 2 | 3 | 4 | 5 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | புரிந்துகொள்கிறேன் | | | | | |
| 46 | தேவைப்படும்போது இந்தப் பள்ளி எனது குழந்தைக்கு நல்வாழ்வு ஆதரவை ஏற்பாடு செய்யலாம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 47 | எனது குழந்தைக்கு உதவக்கூடிய சேவைகளுடன் எனது குடும்பத்தை பள்ளி தொடர்புபடுத்த முடியும் என்பதை நான் அறிவேன் | 1 | 2 | 3 | 4 | 5 |

**வணக்கம் மாணவர்களின் பெற்றோரே/ பராமரிப்பாளரே** **[பள்ளி மற்றும் வளாகத்தின் பெயர்]**

# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு

பக்கம் 6/7

*நீங்கள் கிட்டத்தட்ட கருத்துக்கணிப்பின் செல்க முடிவில் இருக்கிறீர்கள். உங்கள் மதிப்புமிக்க கருத்தை வழங்க நேரம் ஒதுக்கியதற்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.*

## கற்றல் மற்றும் மாணவர் வருகையில் ஆதரவு

ஒவ்வொரு கூற்றுக்கும், உங்களுக்குச் சரியானது எனத் தோன்றும் பெட்டியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், கீழே உள்ளதை நீங்கள் எந்த அளவிற்கு ஏற்கிறீர்கள் அல்லது ஏற்கவில்லை என்பதைக் குறிப்பிடவும்.

*2026 -ஆம் ஆண்டில் உங்கள் அனுபவங்களின் அடிப்படையில் உங்கள் பதில்களை வழங்கவும், மேலும் நீங்கள் அடிக்கடி எப்படி உணர்கிறீர்கள் என்பதைக் கருத்தில்கொள்ளுங்கள். உங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், பின் செல்கவரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது, உங்கள் குழந்தையின் மிக அண்மைய பிறந்தநாளை நினைவில்கொள்ளுங்கள்.*

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| 48 வீட்டில் எனது குழந்தையின் கற்றலுக்கு ஆதரவளிப்பதில் நம்பிக்கைகொள்கிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 49 இந்தப் பள்ளி எனது குழந்தையின் கற்றலை ஆதரிக்க உதவும் தகவல்களை எனக்கு வழங்குகிறது | 1 | 2 | 3 | 4 | 5 |

அடுத்த சில கேள்விகள், பள்ளி நேரத்திற்கு வெளியே உங்கள் பிள்ளை கலந்துகொள்ளக்கூடிய **தனியான, கட்டணப் பயிற்சி** அல்லது பாடங்கள் குறித்து உங்களிடம் கேட்கின்றன. இதில், உங்கள் பிள்ளைக்குப் பள்ளிப் பாடங்களில் உதவுவதற்காக நீங்கள் கட்டணம் செலுத்திப் பெறும் தனிப்பயிற்சி அல்லது வகுப்புகள், பள்ளி சார்ந்த விளையாட்டுகளுக்கான பயிற்சி, மற்றும் மென்பொருளாக்கம், நடனம் அல்லது ஒரு மொழியைக் கற்பது போன்ற திறன் சார்ந்த கற்றல் ஆகியவை அடங்கும்.

50. **பள்ளி நேரத்திற்கு வெளியே**, பின்வரும் எந்த வகையான **தனியான, கட்டணப் பயிற்சி அல்லது பாடங்களில்** உங்கள் குழந்தை பங்கேற்கிறது? [பொருந்தும் அனைத்தையும் தேர்ந்தெடுக்கவும்]

2026-ஆம் ஆண்டில் உங்கள் பிள்ளையின் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்டு உங்கள் பதில்களை அமையுங்கள். உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருந்தால், பின்வரும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது, அண்மையில் பிறந்தநாள் கொண்டாடிய உங்கள் குழந்தையை நினைவில் கொள்ளவும்.

1 ஆங்கிலம் (எ.கா. ஆங்கிலப் பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி)

2 கணிதம் (எ.கா. தனிப் பயிற்சிக்கான கணிதப் பாடங்கள், கணித மன்றங்கள்)

3 கலைகள் (எ.கா., நடனம், நாடகம், இசை, ஊடக கலைகள், காட்சி கலைகள், காட்சி தொடர்பு வடிவமைப்பு பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி)

4 மனிதவியல் (எ.கா. புவியியல், வரலாறு, பொருளாதாரம் மற்றும் வணிகம், குடிமை மற்றும் குடியுரிமை பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி)

5 அறிவியல் (உதாரணமாக, அறிவியல் மன்றங்கள், அறிவியல் பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி)

6 மொழிகள் (எ.கா. ஆங்கிலம் அல்லாத வேறு மொழியைக் கற்பதற்கான பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி)

7 தொழில்நுட்பங்கள் (எ.கா. மென்பொருள் கோடிங் பாடங்கள் அல்லது பயிற்சி, ரோபோடிக்ஸ் மன்றங்கள்)

8 உடல்நலம், உடற்கல்வி மற்றும் விளையாட்டு (எ.கா. உடல்நலம், பாதுகாப்பு, நல்வாழ்வு, உடற்பயிற்சி ஆகியவற்றில் பாட அடிப்படையிலான பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி அல்லது பள்ளி சார்ந்த விளையாட்டில் திறன் அடிப்படையிலான பயிற்சி அல்லது பாடங்கள் (எ.கா. வெளிப்புற நீச்சல் பயிற்சி போன்ற விளையாட்டுகளில் பங்கேற்பது)

9 மற்றவை

10 மேற்கூறிய எதுவும் இல்லை – என் குழந்தை பள்ளி நேரத்திற்கு வெளியே எந்தவொரு தனியான, கட்டணப் பயிற்சி வகுப்புகளிலோ அல்லது பாடங்களிலோ பங்கேற்பதில்லை [தனிப்பட்டது]

சராசரியாக, உங்கள் குழந்தை எவ்வளவு காலத்துக்கு ஒரு முறை கட்டணம் செலுத்தி தனியார் பயிற்சி வகுப்புகளில் பங்கேற்கிறது? (ஒவ்வொரு வகைக்கும் மிகவும் பொருத்தமான கால இடைவெளிகளைத் தேர்ந்தெடுக்கவும்)

| | தினசரி | வாரத்திற்கு 5 முதல் 6 நாட்கள் | வாரத்திற்கு 3 முதல் 4 நாட்கள் | வாரத்திற்கு 1 முதல் 2 நாட்கள் | இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை (இரண்டு வாரத்திற்கு ஒருமுறை) | மாதம் ஒருமுறை | மாதத்திற்கு ஒரு முறைக்கும் குறைவாக / எப்போதாவது |
|---|---|---|---|---|---|---|---|
| 51 [Ask if Q50.1=1] ஆங்கிலம் (எ.கா. ஆங்கிலப் பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 52 [Ask if Q50.2=1] கணிதம் (எ.கா. தனிப் பயிற்சிக்கான கணிதப் பாடங்கள், கணித மன்றங்கள்) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 53 [Ask if Q50.3=1] கலைகள் (எ.கா., நடனம், நாடகம், இசை, ஊடக கலைகள், காட்சி கலைகள், காட்சி தொடர்பு வடிவமைப்பு பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 54 [Ask if Q50.4=1] மனிதவியல் (எ.கா. புவியியல், வரலாறு, பொருளாதாரம் மற்றும் வணிகம், குடிமை மற்றும் குடியுரிமை பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 55 [Ask if Q50.5=1] அறிவியல் (உதாரணமாக, அறிவியல் மன்றங்கள், அறிவியல் பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 56 [Ask if Q50.6=1] மொழிகள் (எ.கா. ஆங்கிலம் அல்லாத வேறு மொழியைக் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |

| | தினசரி | வாரத்திற்கு 5 முதல் 6 நாட்கள் | வாரத்திற்கு 3 முதல் 4 நாட்கள் | வாரத்திற்கு 1 முதல் 2 நாட்கள் | இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை (இரண்டு வாரத்திற்கு ஒருமுறை) | மாதம் ஒருமுறை | மாதத்திற்கு ஒரு முறைக்கும் குறைவாக / எப்போதாவது |
|---|---|---|---|---|---|---|---|
| கற்பதற்கான பாடங்கள் அல்லது தனிப் பயிற்சி) | | | | | | | |
| 57 [Ask if Q50.7=1] தொழில்நுட்பங்கள் (எ.கா. மென்பொருள் கோடிங் பாடங்கள் அல்லது பயிற்சி, ரோபோடிக்ஸ் மன்றங்கள்) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 58 [Ask if Q50.8=1] உடல்நலம், உடற்கல்வி மற்றும் விளையாட்டு (எ.கா. உடல்நலம், பாதுகாப்பு, நல்வாழ்வு, உடற்பயிற்சி ஆகியவற்றில் பாட அடிப்படையிலான பாடங்கள் <u>அல்லது</u> தனிப் பயிற்சி அல்லது பள்ளி சார்ந்த விளையாட்டில் திறன் அடிப்படையிலான பயிற்சி அல்லது பாடங்கள் (எ.கா. வெளிப்புற நீச்சல் பயிற்சி போன்ற விளையாட்டுகளில் பங்கேற்பது) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 59 [Ask if Q50.9=1] பிற தனியார் கட்டணப் பயிற்சி அல்லது பாடங்கள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |

பின்வரும் கூற்றுகள் பள்ளி வருகை மற்றும் வருகையின்மை பற்றியவை. இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது, வருகையின்மை என்பது முழு நாள் வருகையின்மை, பகுதி அல்லது அரை நாள் வருகையின்மை அல்லது தாமதமாக வருவது/சீக்கிரமாக புறப்படுவது என்று பொருள்படும்.

60. என் குழந்தை பள்ளிக்கு வராதது குறித்து என்னுடன் மனம் திறந்த விவாதத்தை பள்ளி ஊக்குவிக்கிறது.

1 உறுதியாக உடன்படவில்லை
2 உடன்படவில்லை
3 உடன்படவோ உடன்படாமலோ இல்லை
4 உடன்படுகிறேன்
5 உறுதியாக உடன்படுகிறேன்
6 பொருந்தாது - என் குழந்தைக்கு வருகையின்மைப் பதிவு குறித்த எந்தக் கவலையும் இல்லை.

61. என் குழந்தையின் வருகையை மேம்படுத்த அவர்களுடன் இணைந்து பணியாற்ற இந்தப் பள்ளி எனக்கு வாய்ப்பளிக்கிறது.

1 உறுதியாக உடன்படவில்லை
2 உடன்படவில்லை
3 உடன்படவோ உடன்படாமலோ இல்லை
4 உடன்படுகிறேன்
5 உறுதியாக உடன்படுகிறேன்
6 பொருந்தாது - என் குழந்தைக்கு வருகைப் பதிவு குறித்த எந்தக் கவலையும் இல்லை.

62. எனது குழந்தையின் வருகை தொடர்பாக தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல்கள், கடிதங்கள் அல்லது குறுஞ்செய்திகள் மூலம் பள்ளி நேரடியாக என்னுடன் தொடர்பு கொள்கிறது.

1 உறுதியாக உடன்படவில்லை
2 உடன்படவில்லை
3 உடன்படவோ உடன்படாமலோ இல்லை
4 உடன்படுகிறேன்
5 உறுதியாக உடன்படுகிறேன்

63. பள்ளி ஆண்டு முழுவதும், வருகை எதிர்பார்ப்புகள் மற்றும் சாதனைகள் குறித்து பள்ளி சமூகத்துடன் தொடர்பு கொள்கிறது.

1 ஒருபோதும் இல்லை
2 அரிதாக
3 சில நேரங்களில்
4 அடிக்கடி
5 எப்போதும்

64. பள்ளியின் வருகைக் கொள்கையை நான் அறிவேன், அதில் ஒரு பெற்றோர்/பராமரிப்பாளர் என்ற எனது பொறுப்புகளும், வருகை எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யப்படாதபோது பள்ளி எடுக்கும் நடவடிக்கைகளும் அடங்கும்.

1 கொஞ்சமும் தெரியாது.

2 கொஞ்சம் அறிந்திருக்கிறேன்

3 ஓரளவு அறிந்திருக்கிறேன்

4 மிதமாக அறிந்திருக்கிறேன்

5 மிகவும் அறிந்திருக்கிறேன்

65. பள்ளி இணையவழி போர்டல்/செயல்பாடு எனது குழந்தை இல்லாததற்கான காரணத்தை துல்லியமாக பதிவு செய்ய எனக்கு உதவுகிறது.

1 உறுதியாக உடன்படவில்லை

2 உடன்படவில்லை

3 உடன்படவோ உடன்படாமலோ இல்லை

4 உடன்படுகிறேன்

5 உறுதியாக உடன்படுகிறேன்

6 பொருந்தாது – இந்த நோக்கத்திற்காக நான் இதுவரை இணையவளி முன்வாயிலை (online portal) /செயலியைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை

66. நான் சில சமயங்களில் என் குழந்தை பள்ளிக்கு வராததை பள்ளிக்குத் தெரிவிக்க மறந்துவிட்டால், அவர்கள் அதே நாளில் என்னைத் தொடர்புகொண்டு தொடர் நடவடிக்கை எடுப்பார்கள்.

1 ஒருபோதும் இல்லை

2 கிட்டத்தட்ட ஒருபோதும் இல்லை

3 சில நேரங்களில்

4 கிட்டத்தட்ட ஒவ்வொரு முறையும்

5 ஒவ்வொரு முறையும்

6 பொருந்தாது - பள்ளிக்குத் தெரிவிக்க நான் மறக்கவில்லை.

67. உங்கள் குழந்தை பல நாட்கள் பள்ளிக்குச் செல்லத் தவறினால், பள்ளி நிர்வாகம் எத்தனை முறை உங்களை அழைத்து அல்லது மின்னஞ்சல் அனுப்பி, தொடர் நடவடிக்கை எடுக்கும்?

1 ஒருபோதும் இல்லை

2 அரிதாக

3 சில நேரங்களில்

4 அடிக்கடி

5 எப்போதும்

6 பொருந்தாது - என் குழந்தை பல நாட்கள் பள்ளியைத் தவறவிடுவதில்லை.

68. பொதுவாக உங்கள் பிள்ளையைப் பற்றி சிந்திக்கும்போது, எந்தெந்தச் சூழ்நிலைகளில் அவர்கள் ஒரு முழு நாள் பள்ளிக்கு வராமல் இருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று நீங்கள் கருதுகிறீர்கள்? *[பொருந்தும் அனைத்தையும் தேர்ந்தெடுக்கவும்]*

1 அவர்களுக்கு லேசான உடல்நலக்குறைவு ஏற்படும்போது (எ.கா., எப்போதாவது ஏற்படும் மூக்கு ஒழுகுதல், மூக்கடைப்பு அல்லது இருமல், தலைவலி, சளி அல்லது வயிற்று வலி)

2 அவர்களுக்கு உடல்நிலை மிகவும் மோசமாக இருக்கும்போது (எ.கா., அவர்கள் மருத்துவரைச் சந்திக்க வேண்டியிருந்தாலோ அல்லது நாள் முழுவதும் படுக்கையில் இருக்க வேண்டியிருந்தாலோ)

3 அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாதபோது, மற்றவர்களுக்கு நோய் பரவுவதைத் தடுக்க அவர்கள் வீட்டில் இருக்க வேண்டியிருக்கும்

4 அவர்களின் உடன்பிறந்தவர் உடல்நலமின்றி இருக்கும்போது

5 பள்ளியில் அவர்களுக்கு நட்புறவு, கொடுமைப்படுத்துதல் அல்லது சமூகப் பிரச்சனைகள் ஏற்படும்போது

6 அவர்களுக்கு நல்வாழ்வு அல்லது ஓய்வு நாள் தேவைப்படும்போது

7 நாங்கள் குடும்ப விடுமுறைக்கு வெளியூர் செல்லும்போது

8 அவர்களுடைய பிறந்தநாள் அல்லது மற்ற சிறப்பு நாட்களில் (எ.கா., ஒரு மத விடுமுறை நாள், குடும்ப நிகழ்வு அல்லது கொண்டாட்டம்)

9 குடும்ப அவசரநிலைக்காக

10 அவர்களுக்கு சந்திப்பு முன்பதிவு இருந்தால் (எ.கா., மருத்துவர், பல் மருத்துவர், சிகிச்சையாளர், பிற மருத்துவ முன்பதிவு)

11 பள்ளிக்கு வெளியே அவர்கள் கலந்துகொள்ள வேண்டிய செயல்பாடுகள் இருந்தால் (எ.கா., விளையாட்டு, இசை போன்றவை)

12 நான் சிரமப்படும்போது, உடல்நிலை சரியில்லாமல், அல்லது மற்ற விடயங்களில் மூழ்கியிருந்தால், அவர்களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்ல முடியாது

13 அவர்களுக்கு லேசான மனநலப் பிரச்சினைகள் (எ.கா., மனச்சோர்வு, இலேசான மன அழுத்தம் அல்லது இலேசான பதட்டம்) இருக்கும்போது

14 அவர்கள் பள்ளிக்குச் செல்வது தொடர்பாக மனநலப் பாதிப்பு அல்லது குறிப்பிடத்தக்க மன உளைச்சலை அனுபவிக்கும் போது

15 நிதிச் சிக்கல்கள் அவர்களுக்குத் தேவையானவற்றுடன் அவர்களைப் பள்ளிக்கு அனுப்புவதற்கான எனது திறனை பாதிக்கும் போது

16 வானிலை நன்றாக இல்லாதபோது (எ.கா., மிகவும் சூடாக/குளிராக/ஈரப்பதமாக இருக்கும்போது)

17 (பள்ளிப் பேருந்து உட்பட) பொதுப் போக்குவரத்து எதுவும் கிடைக்கவில்லை என்றால்

18 அவர்களுடைய உடன்பிறந்தவர்கள் அல்லது மற்ற குடும்ப உறுப்பினர்களைப் பராமரிக்க எனக்கு அவர்களின் உதவி தேவைப்பட்டால்

19 மற்றவை *(குறிப்பிடவும்)* __________

விநியோகிக்க வேண்டாம்

**வணக்கம் மாணவர்களின் பெற்றோரே/ பராமரிப்பாளரே [பள்ளி மற்றும் வளாகத்தின் பெயர்]**

# 2026 பெற்றோர்/பராமரிப்பாளர் கருத்துக்கணிப்பு



## பொதுவான பள்ளிசார் திருப்தி

ஒவ்வொரு கூற்றுக்கும், உங்களுக்குச் சரியானது எனத் தோன்றும் பெட்டியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நீங்கள் எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்கிறீர்கள் அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் குறிப்பிடவும்.

*2026 -ஆம் ஆண்டில் உங்கள் அனுபவங்களின் அடிப்படையில் உங்கள் பதில்களை வழங்கவும், மேலும் நீங்கள் அடிக்கடி எப்படி உணர்கிறீர்கள் என்பதைக் கருத்தில்கொள்ளுங்கள்.*

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| 69 விக்டோரிய பொதுப் பள்ளி அமைப்பானது மாணவர்களை அவர்களின் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு தயார்படுத்துகிறது என்று நான் நம்பிக்கைகொள்கிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 70 இந்தப் பள்ளியானது மாணவர்களை அவர்களின் வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு தயார்படுத்துகிறது என்று நான் நம்புகிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 71 விக்டோரியாவில் உள்ள **அரசுப் பள்ளி அமைப்பின் செல்க மீது எனக்கு நம்பிக்கை உள்ளது** ("அரசுப் பள்ளிகள்" மாநில அல்லது பொதுப் பள்ளிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. "நம்பிக்கை" என்பது பள்ளிகள் மாணவர்களுக்கு நல்ல கல்வியை வழங்குகின்றன, மேலும் மாணவர்களை அவர்களின் | 1 | 2 | 3 | 4 | 5 |

| | உறுதியாக உடன்படவில்லை | உடன்படவில்லை | உடன்படவோ உடன்படாமலோ இல்லை | உடன்படுகிறேன் | உறுதியாக உடன்படுகிறேன் |
|---|---|---|---|---|---|
| வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு தயார்படுத்தும் என்ற நம்பிக்கையாகும்.) | | | | | |
| 72 ஒட்டுமொத்தமாக, இந்தப் பள்ளியில் என் குழந்தை பெறும் கல்வியில் நான் திருப்தி அடைகிறேன் | 1 | 2 | 3 | 4 | 5 |

# மக்கள்தொகை விவரங்கள்

நீங்கள் பெற்ற கல்வித் தகுதியின் ஆகக்கூடிய நிலை என்ன?

1 முதுகலைப் பட்டம்

2 பட்டதாரி டிப்ளமோ/பட்டதாரிச் சான்றிதழ்

3 இளநிலைப் பட்டம்

4 மேம்பட்ட டிப்ளமோ/டிப்ளமோ

5 சான்றிதழ்கள் III/IV

6 ஆண்டு 12

7 ஆண்டு 11

8 ஆண்டு 10

9 சான்றிதழ்கள் I/II

10 ஆண்டு 9 மற்றும் அதற்குக் கீழே

11 கூறாமல் இருக்க விரும்புகிறேன்

உங்கள் பின் செல்கனூட்டக் கருத்துகளுக்கு உங்கள் பள்ளி மதிப்பளிக்கிறது, வேறு ஏதேனும் கருத்துகள் இருந்தால், உங்கள் பள்ளியை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். உங்கள் குழந்தையின் கல்வி குறித்த கவலைகளை திணைக்களத்திடம் தெரிவிக்க விரும்பினால், தயவுசெய்து இந்த இணையத்தளத்தைப் பார்வையிடவும்: *கருத்து மற்றும் புகார்கள் | மேலும் வழிகாட்டுதலுக்கு விக்டோரிய அரசாங்கம் (www.vic.gov.au)*.

## இதுவே கருத்துக்கணிப்பின் செல்க இறுதி!

பங்கேற்றமைக்கு நன்றி. உங்கள் பின் செல்கனூட்டக் கருத்து முக்கியமானது மற்றும் பள்ளியை மேம்படுத்த பயன்படும்.

உங்கள் கருத்துக்கணிப்புப் பதில்களைச் சமர்ப்பிக்க கீழே உள்ள தேர்வுக்குறி பொத்தானைச் சொடுக்கவும்.

[Message to display once submitted]

உங்கள் கருத்துக்கணிப்பு பதில்களைச் சமர்ப்பித்ததற்கு நன்றி. நீங்கள் இப்போது இந்த சாளரத்தை மூடலாம்.